Digitization by eGangotri-South Center

॥ अमरभारतीकुसुमावलिः ॥

(मध्यमा ॥ २ ॥)

(தமிழ்ப் பதவுரை ...றைய ...டியது)

...ல திரு...

சேர்க்கப்...

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அ...ர்கள்

ஆக்ஞைப்படி வெளியிடப்பட்டது

வெளியிடுவோர்:

ஸ்ரீ அமரபாரதீ பரீக்ஷா ஸமிதி

திருவான்மியூர், மதராஸ்-20.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதற் பதிப்பு—1953: 4000
இரண்டாம் பதிப்பு—1956: 2000
மூன்றும் பதிப்பு—1960: 4000

தொகுத்தவர்கள் :

சாஸ்த்ர ரத்னாகர தர்மக்ஞ

பிரும்மஸ்ரீ (போலகம்) ஸுந்தரேச சாஸ்திரிகள்

அவர்கள் சிஷ்யர்

ஸ்ரீ S. சுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்

மஹாதானபுரம்

ஸ்ரீ S. M. கிருஷ்ண சர்மா

THE LIBERTY PRESS, MADRAS-1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முன்னுரை

இப் புத்தகத்தில் நீதிகள் நிறைந்த பல சுலோகங்கள் ஒருங்கே தொகுக்கப் பெற்றிருக்கின்றன. மேலும் எல்லோரும் அவசியம் தமது நடைமுறையில் அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டிய சில திருக்குறள்களும் பதவுரை, பொழிப்புரைகளுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன தமிழ் நாட்டில் ஒவ்வொருவரும் இருகண்களைப் போல் தமிழ் ஸம்ஸ்கிருதம் இருபாஷைகளையும் போற்றி வளர்ப்பதுடன் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற திருவள்ளுவர் வாக்குப்படி இரு பாஷைகளிலும் தொகுக்கப்பட்டிருக்கும் உண்மைகளை அறிந்து அவ் வழி நடப்பதே உலகிற்கு க்ஷேமத்தைத் தரக்கூடியதாக ஆகும். குறள்களின் உரையில் கூறப் பட்டிருக்கும் மேற்கோள்களான சுலோகங்களையும் அர்த்தத்துடன் படிப்பது நலம்.

இப் புத்தகத்தில் தேவநாகரி எழுத்துக்களுக்குச் சரியான கிரந்த எழுத்துக்களும் ஆரம்பத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவ்வெழுத்துக்களையும் மாணவர்கள் கற்றறிவது நலம். இவ்வெழுத்துக்களைப் பயிலுவதால் நம் நாட்டில் ஏட்டுச்சுவடிகளில் பொதிந்து கிடக்கும் அரிய பெரிய விஷயங்களையும் ஆராய்ந்தறியக் கூடும்.

இப் புத்தகத்தை ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி வெளியிட்டிருக்கின்றோம். இதைப் படிப்பவர்கள் பரீக்ஷையில் வெற்றிபெறுவதுடன் எல்லா நன்மைகளையும் பெற்று வாழவேண்டுமென எங்கும் நிறைந்த இறைவனை வேண்டுகின்றோம்.

வெளியிடுவோர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரீக்ஷைக்கு மனப்பாடம் செய்ய வேண்டியவை

குறள் : 1 முதல் 19 வரை.

ஸுபாஷிதங்கள்: சுலோகங்கள் : 3, 4, 7, 17, 18, 28, 31, 38, 42, 52, 57, 59

ஸுபாஷிதங்கள்: ஸூத்ரங்கள் 2, 6, 10, 19, 25

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

॥ अक्षरमाला ॥

உயிரெழுத்துக்கள்

अ आ इ ई उ ऊ ऋ ॠ

𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊 𑌋 𑍠

ऌ ॡ ए ऐ ओ औ अं अः

𑌌 𑍡 𑌏 𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃

மெய்யெழுத்துக்கள்

क ख ग घ ङ च छ ज झ ञ

𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞

ट ठ ड ढ ण त थ द ध

𑌟 𑌠 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧

न प फ ब भ म य र

𑌨 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮 𑌯 𑌰

ल व श ष स ह

𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹

ळ क्ष ज्ञ

𑌳 𑌕𑍍𑌷 𑌜𑍍𑌞

क का कि की कु कू कृ कॄ

𑌕 𑌕𑌾 𑌕𑌿 𑌕𑍀 𑌕𑍁 𑌕𑍂 𑌕𑍃 𑌕𑍄

कॢ के कै को कौ कं कः

𑌕𑍢 𑌕𑍇 𑌕𑍈 𑌕𑍋 𑌕𑍌 𑌕𑌂 𑌕𑌃

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

॥ संयुक्ताक्षराणि ॥

கூட்டெழுத்துக்கள்

ग् + ग = ग्ग	𑌗𑍍𑌗	द् + भ = द्भ	𑌦𑍍𑌭
ङ् + ङ = ङ्ङ	𑌙𑍍𑌙	द् + य = द्य	𑌦𑍍𑌯
च् + च = च्च	𑌚𑍍𑌚	ग् + म = ग्म	𑌗𑍍𑌮
ज् + ज = ज्ज	𑌜𑍍𑌜	स् + क = स्क	𑌸𑍍𑌕
ण् + ण = ण्ण	𑌣𑍍𑌣	श् + य = श्य	𑌶𑍍𑌯
त् + त = त्त	𑌤𑍍𑌤	ल् + प = ल्प	𑌲𑍍𑌪
द् + द = द्द	𑌦𑍍𑌦	त् + य = त्य	𑌤𑍍𑌯
द् + ध = द्ध	𑌦𑍍𑌧	ग् + य = ग्य	𑌗𑍍𑌯
न् + न = न्न	𑌨𑍍𑌨	र् + ध् + व = र्ध्व	𑌰𑍍𑌧𑍍𑌵
प् + त = प्त	𑌪𑍍𑌤	क् + म् + य = क्म्य	𑌕𑍍𑌮𑍍𑌯
प् + प = प्प	𑌪𑍍𑌪	स् + त् + र = स्त्र	𑌸𑍍𑌤𑍍𑌰
य् + य = य्य	𑌯𑍍𑌯	च् + छ् + व = च्छ्व	𑌚𑍍𑌛𑍍𑌵
क् + य = क्य	𑌕𑍍𑌯	त् + म् + य = त्म्य	𑌤𑍍𑌮𑍍𑌯
त् + न = त्न	𑌤𑍍𑌨	न् + त् + य = न्त्य	𑌨𑍍𑌤𑍍𑌯

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருக்குறள்

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்தெல்லாம் - எல்லா எழுத்துக்களும், அகர முதல - அகரத்தை முதலெழுத்தாக உடையன. (அது போல), உலகு - உலகம், ஆதி பகவன் முதற்று - கடவுளை முதலாக உடையது, ஏ = அசை.

எல்லா எழுத்துக்களுக்கும் எப்படி அகரம் முதலெழுத்தோ, அப்படியே உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் கடவுள் முதற்பொருள் என்பது கருத்து. அதிலிருந்து கடவுள் எனப்படும் பரம் பொருள் ஒன்று உண்டு என்பது பெறப்பட்டது, காரணமின்றிக் காரியமில்லாமையின்.

அகரமுதல—அகரமாகிய முதல் என்பது அகர முதல் எனத் தொகையாகும். தொகை என்பதை வட மொழியில் ஸமாஸம் என்பர். அகரமுதல் என்பதற்குப் பலவின்பால் விகுதி ஆகிய அ சேர்க்கப்பட, அகரமுதல எனக் குறிப்புவினை முற்று ஆயிற்று. எழுத்து என்பது ஈண்டுப் பன்மை. ஆதிபகவன் என்பது ஆதியாகிய பகவன் என விரியும். ஆதி என்பதும் பகவன் என்பதும் வட மொழிச்சொற்களின் தற்பவம். பகம் என்ற சொல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஐச்வரியம், வீர்யம், கீர்த்தி, திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறினையுங் குறிக்கும்; பகத்தை யுடையவன் பகவான். பகவான் என்பதன் இடைக்குறை பகவன் என்பது. பகவர் பலர் ஆதலாலும், அவருள் முதல்வர் கடவுள் ஆதலாலும் கடவுளைக் குறிக்க "ஆதிபகவன் ஆகிய முதல்" என்பது ஆதிபகவன் முதல் என ஆயிற்று. அதற்கு து விகுதி சேர்க்க, ஆதிபகவன் முதற்று என்ற குறிப்புவினை வந்தது. உலகு என்பது "உலகம்" என்பதின் கடைக்குறை; அச்சொல் பல பொருள்களைக் குறிப்பினும், சொல் வகையான் ஒருமையாகலான் ஒருமை வினையைக் கொண்டது.

"அகரத்திற்குத் தலைமை.......நாதமாத்திரையாகிய இயல்பால் பிறத்தலானும்" எனப் பரிமேலழகர் கூறுவர். ருக்வேதம் ஐதரேய ஆரண்யகம் அகரமே 'சர்வ வாக்கும், அந்த அகரமே ஸ்பர்சங்களாலும் (வாய்க்குள்ளிருக்கும் பல உறுப்புகள் ஒன்றோடொன்று தொட்டுச்சேர்வதினுலும்), ஊஷ்மங்களினுலும் (அவ்வுறுப்புகள் நேரே சேராமல் சற்று விலகி இருந்து கொண்டு இடையில் கொஞ்சம் காற்று விட்டு ஊதுவதாலும்), வெளியாக்கப்பட்டு ககரம் மகரம் ஷகரம் முதலிய பல்வேறு எழுத்துருவங்களை அடைகின்றது' எனப்பொருள் படும்படி கூறுகிறது. ஆகாயத்தின் குணமாகிய நாதம் ஒன்றே நாகஸ்வரம், புல்லாங்குழல், வீணை, தம்பட்டை முதலிய கருவிகளுக்கு ஏற்றவாறு ஒலிப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பது போலவும், பஞ்சலோகங்கள் உருக்குக் குழாய்களின் தன்மைக் கேற்பப் பல்வேறு வடிவங்களை அடைவதைப்போலவும் இயல்பாகிய நாதமாத்திரையாம் அகரமும் உதடு, நா, பல், அண்ணம் இவற்றின் தொழிலிற்கு ஏற்பப் பலவேறு எழுத்துக்களாய் வருகின்றது. அதற்கு மற்றொரு காரணம் "அக்ஷரங்களுள் அகரம் ஆகின்றேன் யான் (अक्षराणां अकारोऽस्मि)" எனப் பகவத்கீதையில் கண்ணன் கூறியதுமாகுமென்பர்.

உலகில் உண்டாக்கப்படும் காரியப்பொருள்களுக்கெல்லாம் பொதுவாக முதற்காரணம் எனப்படும் உபாதான காரணமொன்றும் நிமித்தகாரணம் எனப்படும் மற்றொரு காரணமும் இருப்பதைக் காண்கிறோம். "ஒரு மூலமில்லாமல் இவ்வுலகமிராது" எனச்சாந்தோக்கிய உபநிஷத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக மட்கலத்திற்கு மண் முதல் காரணம் (அதாவது உபாதான காரணம்), குயவன் நிமித்தகாரணம். ஆனால் பகவான் உலகத்தைச் சிருஷ்டிக்கும்போது அவர் இரண்டற்ற பரம்பொருளாகையால் தானே முதற்காரணமுமாகினர் என்பது திருநான்மறைமுடியான வேதாந்தசாஸ்திரத்தின் கருத்து. இக் கருத்தையே "ஆதிபகவன் முதற்றே வுலகு" என்னுமிடத்தில் முதற்காரணத்தைக் குறிக்கும் முதற்றே என்னும் சொல்லால் உணர்த்துகிறார். "கடவுள் எல்லா சராசரப் பொருளிலும் அவற்றின் தன்மையாய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிற்குமாறுபோல் அகரம் எல்லா எழுத்துக்களிலும் கலந்து தனியாய் நிற்கும்" என்று தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் 'மெய்யினியக்கம் அகரமொடு சிவனும்' என்னும் சூத்திரத்திற்கு உரை எழுதும் சமயத்தில் நச்சினுர்க்கினியர் கூறியிருப்பதும் இக் கருத்தையே விளக்குகிறது. அதற்குப் பலமாக முன்னரே கூறியபடி அக்ஷரங்களுக்குள் அகர மாகிறேன் யான் என்று கண்ணன் சொல்வதை எடுத்துக் காட்டியிருக்கிருர். கீதை 10-வது அத்தி யாயத்தில் 20-வது சுலோகத்தில் "(ஸமஸ்த பூதங் களின் ஹிருதயத்தில் இருக்கிற ஆத்மா நானே. பூதங்களுக்கு ஆதியும் ஸ்திதியும் அந்தமும் நானே अहं आत्मा गुडाकेश सर्वभूताशयस्थितः। अहं आदिश्च मध्यं च भूतानां अन्त एव च ॥" என்று கண்ணன் கூறி 39-வது சுலோகத்தில் "சகல பூதங்களுக்கும் காரணம் அல்லது விதை எதுவோ அது நான். ஜங்கமம், ஸ்தாவரம், ஆகிய எந்த பூதமிருக்கிறதோ அது என்னையன்றி வேறில்லை; यच्चापि सर्वभूतानां बीजं तत् अहं अर्जुन। न तत् अस्ति विना यत् स्यात् मया भूतं चराचरम् ॥" என்று சொல்லி முடிக்கிருர்.) ஆகையி ஞல் கண்ணன் அதிஷ்டானம்பற்றித் தன்னைச் சராசரப் பொருள்களுக்கு முதற்காரணமாகக் கூறினுர் என்பது உறுதியாகிறது. ஆகையால் நச்சினுர்க்கினியர் அகரம் மற்ற எழுத்துக்களில் கலந்து நிற்றலுக்குக் கடவுள் மற்ற சராசரங்களில் கலந்து நிற்பதை உவமையாக எடுத்தது முதற் காரணம் பற்றியே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழா அரெனின்.

(உலகு - உலகத்தார் வாலறிவனற்றாள் - சுத்த மான அறிவினையுடைய கடவுளின் திருவடிகளை, தொழார் எனின் - வணங்காமலிருந்தால், (அவர் எழுத்து - நூல்களை) கற்றதனால் - படித்ததால், ஆய - ஆகிய, பயன் - பலன், என்கொல் - என்னவோ ? (ஒன்றுமில்லை என்பது கருத்து).

உலகு, எழுத்து என்பன முதற்குறளிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. வடமொழி நூலாசிரியர் **அனுவர்த்தித்தன** என்ற சொல்லை வழங்குமிடத்து தமிழுரைக்காரர்கள் **அதிகரித்தன** என்ற சொல்லை வழங்குகின்றனர். சுருங்கச் சொல்லலே திருக்குறளாசிரியரது கருத்தாதலின், கூறிய சொற்களைப் பின்னரும் கூறாது குறட்களை அவ்வாறு அமைத்தனர். வடமொழியில் சூத்திரக்காரர்கள் கொண்ட முறையும் இதுவே ஆகும்.

கற்றதனால் என்னுமிடத்து ஆல் உருபு வழங்கப்பட்டது. அது தொல்காப்பியத்திற் கூறப்பட்ட ஆன் உருபின் விகாரம். **ஆய** என்பது ஆகிய என்பதின் இடைக்குறை. **பயன்** என்பது வடமொழிச் சொல்லின் தற்பவம். **தாள்** என்பது ஈண்டுப் பன்மை. **தொழார்** என்பது செய்யுளோசைக்காக தொழாஅர் என ஆயிற்று. **எழுத்து** என்பது எழுத்துக்களால் ஆகிய நூல்களைக் குறித்தலான் **ஆகுபெயர்**. ஆகுபெயர் என்பதை வடமொழியில் **லக்ஷணம்** என்ற சொல்லால் வழங்குவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தைத்திரீய உபநிஷத்து ஆகாயம் முதலான உலகத்தின் படைப்பைக் கூறுமிடத்து, அப் படைப்பிற்குக் காரணமான ஆன்மாவை ஸத்யஞான வடிவமாகக் கூறுகிறது. இவ்வுண்மையை **ஆதிபகவன் முதற்றே யுலகு** என்னும் வாக்கியத்திற்கு அடுத்த குறளிற் காணப்படும் **வாலறிவன்** என்னும் சொல் உணர்த்துகிறது. சாஸ்திரங்களைக் கற்றதின் பயன் கடவுளின் சரணங்களைத் தொழுது மறுஜன்மமில்லாமல் செய்துகொள்வதுதான் எனப் பொருள் படும்படி இக்குறளின் கருத்தைப் பரிமேலழகர் வெளியிட்டிருக்கிறார்.

3. **மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**
நிலமிசை நீடுவாழ்வார்.

மலர்மிசை - (உள்ளமாகிய) தாமரைமலரின் கண், ஏகினன் - (அன்பால் நினைப்பவர் நினைத்த வடிவோடு விரைந்து) சென்றடைந்தவனுடைய, மாண் அடி - மாட்சிமைப்பட்ட அடிகளை, சேர்ந்தார் - இடைவிடாது தியானிப்பவர், நிலமிசை-(பரமாத்மாவுடைய) உலகத்தில், நீடு - வெகுகாலம், வாழ்வார் — இருப்பார்.

மலர்மிசை என்னும் சொல் திருமாலைத் துதிக்கும் "**மனனக மலமற மலர் மிசை யெழுதரு மனனுணர் வளவிலன்**" என்னும் நம்மாழ்வார் பாசுரத்தில் காணப்படுகிறது. இந்நூலாசிரியர் மேலே கடவுளைக் குறிக்குமிடத்து "**தாமரைக் கண்ணான், உலகளந்தான்**" என்னும் பதங்களைப் பிரயோகிப்பதும் இத்துடன் பொருந்தும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ பாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில் நாரதர் தன் வரலாற்றைக் கூறுமிடத்து 'आहूत इव मे शीघ्रं दर्शनं याति चेतसि ।' என்று கூறுகிறூர். விளிக்கப்படும் ஒருவன் விரைந்து செல்வதுபோல் பகவான் உள்ளத்தின்கண் (உள்ளத் தாமரையின்கண்) தர்சனம் கொடுக்க விரைந்து செல்லுகிறுன் என்ற வாறு. இக்குறளிலுள்ள மலர் மிசை ஏகினுன் என்னும் சொற்றொடருக்கு "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சென்றவன்" என்று பரிமேலழகர் உரை செய்தது மேற் கூறப்பட்ட பாகவத சுலோகத்தின் கருத்தை அனுசரித்திருக்கிறது.

'மலர்மிசை என்பதை பூமேல் நடந்தான் என்பதோர் பெயர்பற்றிப் பிறிதொரு கடவுட்கு ஏற்றுவாரும் உளர்' என்றும் பரிமேலழகர் கூறி யிருக்கிறுர். 'பிறிதொரு கடவுள்' என்பதால் ஜைனக்கடவுளாம் அருகனையே அவர் குறிப்பிடு கிறுர். ஆனுல் திருவள்ளுவர் திருக்குறள் நூல் முழுவதுமே வேதக்கொள்கையையே தழுவிவருவ தாலும் அருகன் என்னும் சொல் ருக்வேதத்தில் பஞ்சருத்ரத்தில் மூன்று இடங்களில் ஈசனைக் குறித் துப் பிரயோகிக்கப்பட்டிருப்பதாலும், அச் சொல் வேதக்கடவுளாம் சிவனையே குறிப்பதாகக்கொள்ள லாம். மற்றும் அக்காலத்தில் அனுதியாய் உள்ள வேதத்திலுள்ள சிவனையே ஜைனர்கள் அருகக் கடவுளாகத் தொழுது வந்தார்கள் என்பதற்கு ஜைன நூலிலும் ஆதாரமுளது. ஜைன சமயத்தின

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ராகிய **முனைப்பாடியார்** என்பவரால் இயற்றப் பட்ட **அறநெறிச் சாரம்** என்னும் நூலில் “அவன்கொல் இவன்கொல் என்றையப்படாதே சிவன் கண்ணே செய்ம்மின்கண் சிந்தை சிவன்ரு னும் நின்று கால்சீக்கும் நிழறிகழும், பிண்டிக்கீழ் வென்றிச் சீர்முக்குடையான் வேந்து” என்னும் செய்யுளில் “சிவன்பாலே சிந்தையை நிறுத்துங் கள். அச்சிவனும் அசோக மரத்தின்கீழ் நின்று குடைகளுடையவனுன அருகனேயாவான்” என்று சொல்லியிருக்கிருர்.

சிவனையும் திருமாலையும் ஒன்ருகப் பாவித்து வழிபடுவது, மகாபாரதம் திருவாய்மொழி முதலிய நூல்களில் பிரசித்தமாயிருக்கிறது. மேற்காட்டியபடி ஜைன நூலில் சிவனையும் அருகனையும் ஒன்ருக வழிபடுவதையும் காண்கிறோம். மகாநாடகம் என் னும் பண்டைய நூலிலும் “यं शैवाः समुपासते शिव इति.........सोऽयं वो विदधातु वाञ्छितफलं त्रैलोक्यनाथो हरिः” எவ்வனைச் சைவர்கள் சிவனென்று வழிபடுகிருர் களோ ......அந்த முவ்வுலக நாயகனுகிய ஹரி உங் களுக்கு விரும்பிய பலனை அளிக்கட்டும் என்று எல்லா மதக்கடவுளையும் ஒன்ருக வழிபட்டமுறை காணப்பட்டிருக்கிறது. 1300 வருஷங்களுக்குமுன் சக்ரவர்த்தியாயிருந்த “ஸ்ரீ ஹர்ஷர்” என்ற மகாகவி மூன்று நாடகங்களியற்றியிருக்கிருர். அவற்றுள் **ரத்னுவளி** என்னும் நாடகத்தில் ஆரம்பத்தில் நாந்திச்லோகங்களில் சிவனையும், பார்வதியையும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விஷ்ணுவையும் **நாகாநந்தம்** என்னும் நாடகத்தில் ஜைனக்கடவுளையும் துதிக்கிறார்.

திருவள்ளுவரும் அக்காலத்தவராதலால் வேதக் கொள்கையை அனுசரித்தே கடவுளை இம்மூன்று முறைகளிலும் துதித்திருக்கக்கூடும்.

**4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.**

வேண்டுதல் வேண்டாமையிலான் அடிசேர்ந் தார்க்கு - விருப்பம், வெறுப்பு அற்ற கடவுளின் அடிகளை இடைவிடாது தியானிப்பவற்கு, யாண்டும்- ஒருபொழுதும், இடும்பை - பிறவித் துன்பங்கள், இல - இல்லை.

இல என்பது பன்மையாதலின் இடும்பை என்பது பன்மைப் பெயராகும். "சரீரமற்றவரை ப்ரியம், அப்ரியம் இவ்விரண்டும் அணுகா" என் னும் சாந்தோக்ய உபநிஷதத் தொடரும், "என்னை யடைந்த மகாத்மாக்கள் துக்கத்திற்கு இருப்பிடமா யும் சாசுவதமற்றதாயும் உள்ள மறுபிறப்பை யடையார்கள் मां उपेत्य पुनर्जन्म दुःखालयं अशाश्वतम् । न आप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥" என்னும் பகவத்கீதை சுலோகமும் இங்கு குறிக்கத் தக்கன.

**5. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொறி வாயில் ஐந்து அவித்தான் பொய் தீர் ஒழுக்கநெறி நின்றார் இந்திரியங்களின் மூலம் நேரும் ஐவகைப்பொருள்களின் நுகர்ச்சியைப் போக்கிய கடவுளின் உண்மையான தர்ம மார்க்கத்தில் அசைவற்று நிற்பவர், நீடுவாழ்வார் - முக்தியடைவர்.

மூன்றும் குறளில் நிலமிசை என ஆசிரியர் கூறியிருத்தலாலும், இக்குறளில் அச்சொல்லைக் கூறாமையாலும், அக்குறள் காரியப்பிரம்மலோகத்தைக் குறிக்கின்றது என்றும், இக்குறள் முக்தியை குறிக்கின்றது என்றும் கொள்ளவேண்டும். ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் பிருஹதாரண்யகோபநிஷத் பாஷ்யத்தில் 'ब्रह्मलोकः' என்பதற்கு 'ब्रह्मणः लोकः (ப்ரம்மாவினுடைய லோகம்)' என்றும் ब्रह्मैव लोक (பிரம்மமாகிய லோகம்) என்றும் இருவகையாகக் கூறியிருத்தல் நோக்கத்தக்கது. ब्रह्मैव लोकः என்பதை ஒட்டியே சிறப்பென்னும் செம்பொருள் எனத் திருவள்ளுவர் (69-ம் குறளில்) கூறுகின்றார்.

6. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

இறைவனடி - கடவுளின் திருவடிகளை (சேர்ந்தார் - இடைவிடாது தியானிப்பவர்), பிறவிப்பெருங்கடல் - பிறவியாகிய பெருங்கடலை, நீந்துவர் - தாண்டுவர், சேராதார் - தியானிக்காதவர், (அதனை) நீந்தார் - தாண்டமாட்டார்.

சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். இதே கருத்தை "யாரைக்கண்டு யதிகள் பிறப்பு இறப்பு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவற்ருல் விடுபட்டவர்களாகி ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுகிருர்களோ' (यं दृष्ट्वा यतयः तात न शोचन्ति गतज्वराः। जन्ममृत्युभयात् मुक्ताः तीर्णाः संसारसागरम् ॥)" என்று மஹாபாபாரதம் அனுசாஸனபர்வம் கூறும்.

7. வானின் றுலகம் வழங்கி வருதலான்
தானமிழ்த மென்றுணரற் பாற்று.

வானின்று-மழை காரணமாக, உலகம்-உலகத்துள்ள பொருள்கள், வழங்கி வருதலால்தான்-ஜீவித்து வருதலாலேயே, அமிழ்தம் என்றும்-அம்ருதம் என்றும், உணரற் பாற்று-உணரத்தகுந்தது.

நீரை வடமொழியில் **அம்ருதம்** என்ற சொல்லால் வழங்குகின்றனர். அச்சொல்லுக்கு **மரண மற்றது** என்பது காரணப்பொருள். மழை உலகத்துப்பொருளின் மரணமின்மைக்கு காரணமாய் இருத்தலின், அதனை அச்சொல்லால் குறித்தனர் என இவ்வாசிரியர் கருதுகின்றனர். வடமொழி **அம்ருதம்** என்ற சொல் தமிழில் அமிழ்தம், அமிழ்து, அமிர்தம், அமிர்து, அமுதம், அமுது என வழங்குகிறது.

வானின்று என்றவிடத்து நின்று என்பது ஏதுப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருப்பு எனக் கொள்ளல் தகும்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

வானம்-மழை, வறக்குமேல்-பெய்யாவிடின், ஈண்டு-இப்பூவுலகிலிருந்து, வானோர்க்கு-தேவர்க்கு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறப்போடு-சிறப்பாக, பூசனை-பூசனம், செல்லாது-நடவாது.

வானோர்க்குப் பூசனையாவது யாகம், ஹோமம் முதலியன. வானோர் என்பதிலுள்ள, 'வான்' என்பது ஸ்வர்க்கத்தைக் குறிக்கும்.

ஸ்ரீபகவத்கீதை 3-வது அத்தியாயத்தில்,

'देवान् भावयत अनेन ते देवाः भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परं अवाप्स्यथ ॥
इष्टान् भोगान् हि वो देवाः दास्यन्ते यज्ञभाविताः ॥
अन्नात् भवन्ति भूतानि पर्जन्यात् अन्नसंभवः ।
यज्ञात् भवति पर्जन्यः यज्ञः कर्मसमुद्भवः ॥'

என்னும் 11, 12, 14 வது ச்லோகங்களில் வானவர் மானிடரை மழையாலும், மானிடர் வானவரை யக்ஞத்தாலும் பரஸ்பரம் உபசரித்துக் கொள்ளுவதால் இருவரும் நிரந்தரமான நன்மையை அடைவார்கள் எனப் பொருள்படக் கூறியிருக்கிறது.

9. தானம் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

வானம்-மழை, வழங்காது எனின்-பெய்யாவிடின், வியனுலகம்-அகன்ற உலகத்தின்கண், தானம் தவம்-தானம் தவம் இரண்டும், தங்கா-உளவாக.

மக்கள் அவரவர்கள் அதிகாரத்திற்குத் தகுந்தபடி தானமோ, தவமோ செய்யாரெனின் அவர்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிழைத்திருப்பது வீண் எனும் கருத்தை மகாபாரதம் பின்வருமாறு கடுமையாகக் கூறுகிறது.

'द्वावंभसि निवेष्टव्यौ कण्ठे बध्वा दृढां शिलाम् ।
धनवन्तं अदातारं दरिद्रं च अतपस्विनम् ।।

தானம் செய்யாத பணக்காரனையும் தவம் செய்யாத தரித்திரனையும் கழுத்தில் கல்லைக்கட்டி சமுத்திரத்தில் விட்டுவிடலாம்.' இதனால் ஈகை இல்லாத பணக்காரனும் தவம் செய்யாத ஏழையும் பூதேவிக்குப் பாரமே என்னும் தத்துவம் குறிப்பிடப்படுகிறது. அவ்விதம் பாரமாயிருப்பவர்கள் உலகில் அதிகமாகும் பொழுதுதான் யுத்தங்கள், கலகங்கள், கொள்ளைநோய்கள் முதலியவைகளின் மூலம் பூபாரம் குறைக்கப்படுகிறது. ஆகையால் அவைகளுக்கெல்லாம் மருந்து தானமும் தவமுமே.

10. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

இருமை வகை-இம்மை, மறுமை இவ்விரண்டின் தன்மையை, தெரிந்து-ஆராய்ந்து பார்த்து, ஈண்டு-இவ்வுலகத்தில், அறம் பூண்டார் பெருமை-துறவறத்தைக் கொண்டவரின் பெருமை, உலகு-உலகத்தில், பிறங்கிற்று-சிறப்புள்ளது ஆகும்.

இவ்வதிகாரம் நீத்தாரைப்பற்றிக் கூறுதலான் ஈண்டும் அறம் துறவறத்தைக் குறிக்கும். இருமை வகை என்பதற்கு 'பிறப்பு, வீடு என்னும் இரண்டினது கூறுபாடுகளை' என்று பொருள் கூறுகிறார் பரிமேலழகர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

**11. உரனென்னுந்தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

உரன் - மனத்திண்மை, என்னும் - என்ற, தோட்டியான் - அங்குசத்தால், ஓர் ஐந்தும் - ஒப்பற்ற ஐந்து இந்திரியங்களையும், காப்பான் - கெட்ட வழியிற் செல்லாது காப்பவன், வரன் - எல்லாவற்றிற்கும் மிகுந்தது, என்னும் - எனச் சொல்லப்படும், வைப்பிற்கு - நிலைக்கு, ஓர் வித்தாம் - ஒரு விதை ஆவான்.

இந்திரியங்கள் எவரையும் இழுத்துவிட ஆற்றல் உள்ளமையால் அவை ஒப்பற்றன எனக் கூறப்பட்டது.

"ஐந்து என்பது ஐந்து ஞானேந்திரியங்களைக் குறிக்கும். உரனைத் தோட்டிக்கு உவமித்தலான், இந்திரியங்களை ஐந்து யானைகளுக்கு உவமிக்கப் பட்டதாகக் கொள்ளவேண்டும்." 'ப்ரம்மவித் பரத்தை அடைகிறான்' என்ற தைத்திரீய உபநிஷதத் தொடரில் பரம் என்பது மோக்ஷத்தைக் குறித்தலின் 'வரன்' என்பதற்கு மோக்ஷம் எனப் பொருள் கொள்ளவேண்டும்.

மனமானது இந்திரியங்களின் வழியாய் எப்போதும் வெளிமுகமாகவே சென்று கொண்டிருப்பதனால் தான் தன்னுள்ளே பிரகாசித்து விளங்கும் அகண்ட ஆனந்த ஆத்மப்பிரகாசத்தைக் காணாது வீணாகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இக்குறளில் இந்திரியங்களை அடக்குவது **வித்து** என்று கூறப்படுவதால், இதற்கு அடுத்தபடியான ஸகுண ஈச்வரத்யானம் **முளை** எனவும், அவர் அருளால் ஏற்படும் ஆத்ம ஞானம் **புஷ்பம்** எனவும் வரன் என்னும் மோக்ஷமானது பிறவி என்னும் விருக்ஷத்தின் பலனும் **பழமாகவும்** பெறப்படுகிறது.

'இந்திரியங்களைத் தத்தம் விஷயத்திலிருந்து மனத்தால் ஒருவன் திருப்பினுல் தன்னிடமே பிரகாசிக்கும் பிரம்மத்தைப் பார்க்கிருன்.

इन्द्रियाणि इन्द्रियार्थेभ्यः मनसा विनिवर्तयेत् ।
ततः पश्यति तत् ब्रह्म ज्वलत् आत्मनि संस्थितम् ॥

என்று மகாபாரதம் அநுசாசனபர்வம் கூறுகிறது.

12. ***ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா***
னிந்திரனே சாலுங் கரி.

ஐந்தவித்தான் - ஐந்து இந்திரியங்களையும் அடக்கிய துறவியின், ஆற்றல் - சக்திக்கு, அகல் விசும்புளார் கோமான் - அகன்ற சுவர்க்கத்தில் உள்ளோர்க்கு அரசனுகிய இந்திரனே, கரி - சாக்ஷி, சாலும் - பொருந்தும்.

ஈண்டு **ஐந்தவித்தான்** என்பது இந்திரனை ஆயிரங்கண்ணன் ஆக்கிய **கௌதமரையும்,** இந்திரப்பட்டம் எய்திய நஹுஷனைப் பாம்பாக்கிய **அகஸ்தியரையும்,** ஸோமயாகத்தில் ஸோமத்தில் ஒரு பாகத்தை அச்வினிதேவதைகளுக்கு இந்தி

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

ரனைக் கொடுக்கச் செய்த ச்யவனரையும், மருத்தன் யாகத்தில் இந்திரனை வரச்செய்த சம்வர்த்தரையும், பன்னிரு ஆண்டுகளில் தான் யாகம் செய்ய அப்போது மழை பெய்யாமல் தடுத்த இந்திரனை மழை பெய்யும்படி செய்வித்த அகஸ்தியரையும் குறிக்கும். இக்கதைகளை மகாபாரதம் அநுசாஸனபர்வம், அச்வமேதபர்வம் முதலியவற்றில் காண்க.

மூவுலகையும் ஆளும் ஐசுவரிய முடையோனுடைய ஆற்றலைவிட ஐந்து இந்திரியங்களையும் அடக்கிய தவசியின் ஆற்றல் பெரிது என்னும் உண்மை இக்குறளின்றும் பெறப்படுகிறது.

13. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூங்கு
ஆக்க மெவனோ வுயிர்க்கு.

உயிர்க்கு - மனிதர்க்கு, சிறப்பு - மோக்ஷத்தை, ஈனும் - தருவதும், செல்வமும் - இம்மைச் செல்வம் மறுமைச் செல்வமாம் சுவர்க்காதி இன்பங்களையும், ஈனும் - தருவதுமான, அறத்தின் - தருமத்தைக் காட்டிலும், ஊங்கு - மேலான, ஆக்கம் - மேன்மையைத் தருவது, எவன் - யாது?

சிறப்பு, செல்வம் என்பன கடோபநிஷத்தில், கூறப்படும் ச்ரேயஸ், ப்ரேயஸ் என்பவற்றையே குறிக்கும்.

சுவர்க்காதி சுகத்தைத் தரும் பிரவ்ருத்தி தர்மமும் மோக்ஷ சுகத்தைத் தரும் நிவ்ருத்தி தர்மமும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆக தர்ம மார்க்கம் இரண்டுவிதமென்று சொல்லப் படும்.

'सुखाभ्युदयिकं चैव नैश्रेसिहिकमेव च ।
प्रवृत्तं च निवृत्तं च द्विविधं कर्म वैदिकम् ॥'

என்னும் மனுஸ்ம்ருதி சுலோகம் ஈண்டு குறிப்பிடத் தகுந்தது.

14. *அன்றறிவா மென்னுதறஞ் செய்க மற்றது*
பொன்றுங்காற் பொன்ருத் துணை.

(உயிர் - மனிதர்), அன்று - கிழத்தனத்தில். அறம் - தர்மத்தை, அறிவாம்—செய்வோம், என்னுது. என்று நினையாமல், (தருமத்தை), செய்க - (இப் போதே) செய்தல்வேண்டும். அது - அத் தருமத் தின் பயன், பொன்றுங்கால் - சாகும்பொழுது (அவர்க்கு) பொன்ருத்துணை - அழிவில்லாத துணை, (ஆகும்). மற்று என்பது அசைநிலை.

'பரலோகத்தில் மனிதர்க்குச் சகாயமாயிருப்பது தர்மமே धर्म एको मनुष्याणां सहायः पारलौकिकः ।' என்று மகாபாரதம் அனுசாஸநிகபர்வம் கூறுகிறது. ஸ்தூல சரீரத்தை விட்டு ஜீவன் செல்லும்போது அவனுடைய நற்செயல் தீச்செயல் இவற்றின் பயனே அவனுடன்செல்லுமாகையாலும், எப்போது தனக்கு மரணம் நேரிடும் என்று அறியப்படாமை யாலும் அப்போதைக்கப்போதே ஒவ்வொருவரும் தர்மச் செயல்களைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கல்வியையும் பொருளையும் சம்பாதிக்கும் விஷயத்தில் தான் சிரஞ்ஜீவி என்ற எண்ணத்தைக் கொண்டே அவ்விரண்டையும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். தர்மம் செய்யும்போதோ யமன் தன்னைப் பிடித்துவிட்டான் என்று நினைத்துக் கொண்டு உடனே செய்யவேண்டும்.

'अजरामरवत् प्राज्ञः विद्यां अर्थं च साधयेत् ।
गृहीत इव केशेषु मृत्युना धर्मं आचरेत् ॥'

15. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

அறத்தாறு - தர்மத்தின் ப்ரயோஜனம், இது வென வேண்டா - இது என்று கூறவேண்டாம், (அது) சிவிகை - பல்லக்கை, பொறுத்தானோடு - தூக்குகின்றவனோடு, ஊர்ந்தானிடை - தூக்கப்படு கின்றவனிடத்தில் (காணப்படும்.)

பல்லக்குக்குள் இருக்கின்றவன் தர்மத்தைச் செய்தவன் என்பதும் அதனைத் தூக்குகின்றவர்கள் தர்மத்தைச் செய்யாதவர் என்பதும் வெளிப்படை யாக அறியப்படும். "சிலர் சிவிகையைத் தூக்கு கின்றனர், சிலர் அதனுள் இருக்கின்றனர்

वहन्ति शिविकां अन्ये यान्ति अन्ये शिबिकागताः ।"

என்று மகாபாரதம் சாந்தி பர்வம் கூறுகிறது. உலகத்தில் நல்வினை தீவினை இருக்கும் வரை, அதாவது, உலகம் இருக்கும் வரை, மேல் கண்ட

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வினைகளின் பயனாக மேல் கீழ் நிலைகள் எம் முறையிலாவது இருந்தே தீரும். ஞானிக்கு இருவினைகளும் அழிந்த ஞான்று பொய்யான இவ்வுலகமும் அழியும். உண்மையான ஆன்மா வெளிப்படும்.

16. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

அறத்தான் – தர்மத்தால், வருவதே - பெறப்படுவதே, இன்பம் (ஆகும்). மற்றெல்லாம்-வேறெல்லாம், (அதன்) புறத்த - இன்பத்தைத் தருவன வல்ல, புகழும் - கீர்த்தியையும், இல - உடையன வல்ல, இன்பத்தையும் புகழையும் கொடுப்பது தர்மச் செயலே யன்றி வேறில்லை என்பது கருத்து.

" பாவத்தான் வரும் பிறனில் விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின் 'புறத்த' என்றார்" என்கிறார் பரிமேலழகர். பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவானும் " நான் மக்களிடை தர்மத்திற்கு விரோதமில்லாத இன்பமாக அமர்ந்திருக்கிறேன் : धर्म अविरुद्धो भूतेषु कामः अस्मि भरतर्षभ ।" என்று கூறுகிறார்.

17. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

இல்வாழ்வான் - கிருஹஸ்தன் (இல்லறத்திலிருப்பவன்,) என்பான் - என்று சொல்லப்படுபவன், இயல்பு - சாஸ்திர முறையை, உடைய -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அனுசரிக்கிற, மூவர்க்கும் - பிரம்மசாரி, வான ப்ரஸ்தன், சன்னியாசி என்கிற மூவர்க்கும், நல்லாற்றின் - தரும ஒழுக்கத்தின்கண், நின்ற-இருக்கின்ற, துணை - துணை (ஆவன்.)

கிருஹஸ்தன் மற்ற மூவர்க்கும் உணவு, உடை, வசிக்குமிடம் இவற்றைக் கொடுக்கவேண்டுமென்பது கருத்து.

'கிருஹஸ்தாச்ரமத்தை அண்டியே ஏனைய ஆச்ரமங்களெல்லா மிருக்கின்றன:

एवं गार्हस्थ्यं आश्रित्य वर्तन्ते इतर आश्रमाः ।'

என்றும் 'தாயை அண்டி எல்லா ஜந்துக்களும் ஜீவிப்பது போல கிருஹஸ்தாச்ரமத்தை அண்டி ஏனைய ஆச்ரமங்கள் ஜீவிக்கின்றன:

यथा मातरं आश्रित्य सर्वे जीवन्ति जन्तवः ।
तथा गृहाश्रमं प्राप्य सर्वे जीवन्ति च आश्रमाः ॥'

என்றும் மகாபாரதம் கூறுகிறது.

18. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க
ஐம்புலத்தா றோம்ப றலை. [லுனென்றாங்கு

தென்புலத்தார் - பித்ருதேவதைகள், தெய்வம்-தேவதைகள், விருந்து - விருந்தினர், ஒக்கல் - சுற்றத்தார்கள், தான் - தான், என்ற ஆங்கு - என்று சொல்லப்பட்ட ஐம்புலத்து - ஐந்து இடத்திலும் ஆறு - தர்மத்தை, ஓம்பல் - தவறாமல் செய்தல், தலை - (இல் வாழ்வானுக்கு) சிறந்தது ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தேவதை, அதிதி, வேலையாட்கள், பிதரர், தான் இவ்வைவர்க்கும் செலுத்தவேண்டிய கடனுடன் ஜீவன் பிறக்கிறான் என மகாபாரதம் கூறுகிறது:

'देवता-अतिथि-भृत्यानां पितॄणां आत्मनः तु यः ।
न निर्वपति पञ्चानां उच्छ्वसन् न स जीवति ॥'

பித்ருதேவதைகளும் தேவதைகளுள் அடங்குவரேனும் சிறப்பு நோக்கித் தனிமையாகக் கூறப்பட்டார்கள். யாது சிறப்பெனில் அவர்கள் எப்போதும் பிரம்மசாரிகளாகவும், பரிசுத்தராகவும், கோபமற்றவர்களாகவும் இருக்கின்றனர் என மனுஸ்மிருதி கூறுகிறது.

'अक्रोधनाः शौचपराः सततं ब्रह्मचारिणः ।
न्यस्तशस्त्राः महाभागाः पितरः पूर्वदेवताः ॥'

பித்ருலோகத்திற்குச் செல்லும் மார்க்கத்திற்கு தக்ஷிண மார்க்கம் (தெற்குவழி) என்றும், தேவலோகத்திற்குச் செல்லும் மார்க்கத்திற்கு உத்தரமார்க்கம் (வடக்குவழி) என்றும் உபநிடதமும் கீதையும் கூறும். பித்ருகர்மங்கள் செய்யும் போது தென் தோளில் (வலது தோளில்) பூணூலையும், தேவகாரியம் செய்யும்போது வட தோளில் (இடது தோளில்) பூணூலையும் தரிக்கவேண்டுமென்று வேதமும் தர்ம சாஸ்திரங்களும் கூறுகின்றன. ஒருவன் கிழக்குத் திக்கை நோக்கி நிற்கும்போது வலது தோள் தென் தோளாகவும் இடதுதோள் வடதோளாகவும் ஆகிறது. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நியாயப்படி ஒவ்வொரு உடலிலும் வலது பாகம் தென்புறமாகையால் பித்ருக்ருத்யம் செய்யும் போது பூனூலை வலமாகத் தரிப்பது பித்ருக்களைத் தென்புலத்தார் என்று நாயனார் அழைப்பதற்குச் சான்றாகும். பித்ரு கார்யங்களினின்றும் தெய்வ காரியங்களினின்றும் சாஸ்த்ர முறையில் விடுபட்ட துறவிக்கு இருவகைப் பூனூலும் இல்லை. உலக மானிடரிடமிருந்து மாத்திரமல்லாமல் பித்ருக்கள், தேவர்கள், இவர்களிடமிருந்துகூடக் கிடைக்கும் பயன்களிலும் ஆசையற்றவனே உண்மைத்துறவி யாவான்.

இக்குறளின்படி ஒருவன் நடந்து, தன் வருவாயில் ஆறில் ஒரு பங்கைப் பகிர்ந்து தன்னை அண்டிவருவோருக்காக ஒதுக்கிவைத்து நாயனார் கூறுகிறபடி தெய்வகர்மம் செய்து வந்தால் உலகில் கெட்ட காரர்யங்களும், அவைகளுக்குக் காரணமான கெட்ட எண்ணங்களும் குறையும்.

• விருந்தோம்பல் என்பது நம்மை அண்டி வந்தவர்களை ஓம்பல். சுற்றத்தாரில் உபகாரத்திற்குத் தகுதியானவர்களை தாமே தேடி உபகரிக்க வேண்டுமென்பது கருத்து. "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பது ஔவையார் வாக்கு.

'रक्षिता जीवलोकस्य स्वजनस्य च रक्षिता ।'

என்பது வால்மீகியினுடைய வாக்கு. இவ்வாக்கின் படி பொதுவாக உலகத்திலுள்ள ஜீவர்களையெல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

லாம் ரக்ஷிக்கும் பொறுப்போடுகூட தன் சுற்றத்தாரையும் ரக்ஷிக்கும் பொறுப்பு விசேஷித்துக் கூறப்படுகிறது. இவ்வெல்லா தர்மங்களையும் செய்வதற்கு, தான் கேடில்லாமல் வாழவேண்டியது இன்றியமையாததாதலால் தன்னையும் ரக்ஷித்துக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தை நாயனர் தான் என்னும் பதத்தால் குறிப்பிடுகிருர். இவ்வைந்திலும் தென் புலத்தாரை முதலில் சொன்னதால் மற்ற கடமைகளைப் பித்ருகார்யத்தை முதலில் வைத்துச் செய்யவேண்டுமென்றேற்படுகிறது.

'देवकार्यादपि मुने पितृकार्यं विशिष्यते।' என்று மகாபாரதம் கூறுகிறது. எல்லாக் கர்மங்களையும் சிரத்தையுடன் செய்யவேண்டியது விதியாயினும் தென் புலத்தாருக்குச் செய்யும் கடமையே "சிராத்தம்" அதாவது சிரத்தை மேலிட்ட கர்மம் என்று வழங்கப்படுகிறது. अभ्यर्हितं पूर्वं என்பது பாணினியின் இலக்கண சூத்ரம். விசேஷமாக ஆராதிக்கப்படுவதை முதலில் சொல்லவேண்டுமென்பது இச்சூத்திரத்தின் கருத்து. இதை அனுசரித்தே நாயனர் தென்புலத்தாரை முதலில் கூறினர் போலும். நாயனருக்கு ஆழ்ந்த சாஸ்திர நுட்பங்களிலுள்ள ஆற்றலை இக்குறளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

19. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

வையத்துள் - பூமியில், வாழ்வாங்கு - வாழ வேண்டிய முறைப்படி, வாழ்பவன், வான் - வானின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண், உறையும் - தங்கும், தெய்வத்துள் - தேவதைகளுள், வைக்கப்படும் - வைக்கப்படுவான்.

"தனக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்பவன் தேவர்களோடு ஒப்பாவான்

प्रवृत्तं कर्म संसेव्य देवानां एति साम्यताम् ।'

என்று மனுஸ்ம்ருதியும் கூறுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

॥ गुरुभ्यो नमः ॥

॥ सुभाषितानि ॥

आपो नाराः इति प्रोक्ताः आपो वै नरसूनवः ।
ता यदस्यायनं पूर्वं तेन नारायणः स्मृतः ॥ १ ॥

आपः - ஜலம், नाराः इति - "நாரா" என்ற சப்தத்திஞல், प्रोक्ताः - சொல்லப்படுகின்றன (ஏனெனில்), आपः - ஜலம், नरसूनवः - நரன் என்ற பரமாத்மாவின் குழந்தைகள், यत् - எக்காரணத்தால், ताः- அந்த ஜலம், पूर्वं - (சிருஷ்டிக்கு) முன்பு, अस्य - இந்த பரமாத்மாவிற்கு, अयनं - ஆச்ரயமோ, तेन - அதஞல், नारायणः - நாராயணன் என்று, स्मृतः - சொல்லப்படுகிருர்.

निमेषा दश चाष्टौ च काष्ठा त्रिंशत्तु ताः कला ।
त्रिंशत्कला मुहूर्तः स्यादहोरात्रं तु तावतः ॥ २ ॥

दश च अष्टौ च - பதினெட்டு, निमेषाः - நிமிஷங்கள் (இயற்கையான கண் இமைகளின் கொட்டுதலுக்கு நிமிஷம் எனப்பெயர்), काष्ठा - "காஷ்டா" என்ற காலம் (அவ்விதம்), त्रिंशत् - முப்பது, ताः तु - அந்த காஷ்டைகள், कला - "கலா" எனப்படும், त्रिंशत् कला -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முப்பது கலைகள், मुहूर्तः - "முகூர்த்தம்" स्यात् - என்ப தாகும், तावतः - முப்பது முகூர்த்தங்களை, अहोरात्रं - ஓர் இரவு பகல் (அதாவது ஒரு நாள்) என, विद्यात् - அறிய வேண்டும்.

अध्यापनमध्ययनं यजनं याजनं तथा ।
दानं प्रतिग्रहं चैव ब्राह्मणानामकल्पयत् ॥ ३ ॥

अध्ययनं - வேதத்தைக் கற்றல், अध्यापनं - கற்பித்தல், यजनं - யாகம் செய்தல், याजनं - யாகம் செய்வித்தல், तथा - அவ்வாறு, दानं - தானம் செய்தல், प्रतिग्रहं - தானம் வாங்குதல் (ஆகிய ஆறு கர்மாக்களை), ब्राह्मणानां - ப்ராம்ஹணர்களுக்கு, अकल्पयत् - ஏற்படுத்தியுள்ளார்.

वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
एतच्चतुर्विधं प्राहुः साक्षाद्धर्मस्य लक्षणम् ॥ ४ ॥

धर्मस्य - தர்மத்திற்கு, वेदः - வேதம், स्मृतिः - தர்ம சாஸ்திரம், सदाचारः - நல்லோர்களின் (சிஷ்டர்கள்) நடத்தை, स्वस्य आत्मनः प्रियं - தன் மனதின் சந்தோஷம் ஆகிய, एतच्चतुर्विधं - இந்த நான்கு விதமான, लक्षणं - ப்ரமாணத்தை, प्राहुः - சொல்கிறார்கள்.

स्वाध्यायेन व्रतैर्होमैस्त्रैविद्येनेज्यया सुतैः ।
महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ॥ ५ ॥

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

स्वाध्यायेन - வேதாப்யாஸத்தாலும், व्रतैः - மதுபானம், மாம்ஸம் உண்ணுதல் முதலியவற்றை விடுதலாலும், होमैः - ஔபாஸனம் முதலிய ஹோமங்களாலும், त्रैविद्येन - த்ரைவித்யம் என்ற வ்ரதத்தாலும், इज्यया - (ப்ரம்ஹசர்யாச்ரமத்தில்) தேவர், ரிஷி, பித்ருக்களுக்கு செய்யும் தர்ப்பணத்தாலும், सुतैः - (க்ருஹஸ்தாச்ரமத்தில்) ஸந்ததிகளை விருத்தி செய்வதாலும், महायज्ञैः च - தேவயக்ஞம், ரிஷியக்ஞம், பித்ருயக்ஞம், பூதயக்ஞம், மனுஷ்யயக்ஞம் ஆகிய தினம் செய்யவேண்டிய ஐந்து வித யாகத்தாலும், यज्ञैः च - ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களாலும், इयं - இந்த, तनुः - சரீரத்தால் பிரிக்கப்பட்ட ஆத்மா, ब्राह्मी - பரமாத்மாவை அடையக்கூடிய யோக்யதையுள்ளதாக, क्रियते - செய்யப்படுகிறது.

पूजयेदशनं नित्यमद्याच्चैतदकुत्सयन् ।
दृष्ट्वा हृष्येत्प्रसीदेच्च प्रतिनन्देच्च सर्वशः ॥ ६ ॥

नित्यं - எப்பொழுதும், अशनं - அன்னத்தை, पूजयेत् - பூஜிக்கவேண்டும் (ப்ராணனைச் சேர்ந்ததென்று த்யானம் செய்யவேண்டும்), एतत् - இந்த அன்னத்தை, अकुत्सयन् - நிந்தனை செய்யாதவராக, अद्यात् - சாப்பிடவேண்டும், दृष्ट्वा - (அன்னத்தை) பார்த்து, हृष्येत् - ஸந்தோஷமடையவேண்டும், प्रसीदेत्

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

च - (அன்னத்தைப் பார்த்ததினுல் மனதிலுள்ள வருத்தத்தை விட்டு) தெளிவுள்ளவனுயிருக்க வேண்டும், सर्वश: च - எல்லா அன்னத்தையும், प्रतिनन्देत् - (எப்பொழுதும் எங்களுக்கு அன்னமிருக்கவேண்டுமென்று) வந்தனம் செய்யவேண்டும்.

पूजितं ह्यशनं नित्यं बलमूर्जं च यच्छति ।
अपूजितं तु तद्भुक्तमुभयं नाशयेदिदम् ॥ ७ ॥

हि - எக்காரணத்தால், पूजितं - பூஜிக்கப்பட்ட, अशनं - அன்னம், बलं - சாமர்த்தியத்தையும், ऊर्जं च - வீர்யத்தையும், यच्छति - கொடுக்கின்றதோ (அதனுல் பூஜிக்க வேண்டும்), अपूजितं - பூஜிக்கப்படாத, इदं तु - இந்த அன்னமோ, भुक्त – சாப்பிடப்பட்டதாக, तद् उभयं - அந்த இரண்டையும், नाशयेत् - அழித்துவிடும்.

न जातु कामः कामानामुपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्धते ॥ ८ ॥

कामः - ஆசையானது, जातु - ஒருபொழுதும், कामानां - ஆசைப்படுகின்ற சப்தம், ரூபம், முதலிய விஷயங்களை, उपभोगेन – அனுபவிப்பதால், न शाम्यति - சாந்தியடையாது, हविषा - நெய் முதலிய ஹோமம் செய்யும் த்ரவ்யத்தால், कृष्णवर्त्मा इव - அக்னி போல,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

भूयः एव - மிகவும் அதிகமாகவே, अभिवर्धते - விருத்தி யடைகிறது.

श्रुत्वा स्पृष्ट्वा च दृष्ट्वा च भुक्त्वा घ्रात्वा च यो नरः ।
न हृष्यति ग्लायति वा स विज्ञेयो जितेन्द्रियः ॥ ९ ॥

यः - எந்த, नरः - மனிதன், श्रुत्वा - (ஸ்துதி நிந்தை வாக்யங்களை) கேட்டும், स्पृष्ट्वा च - (மிருதுவான பட்டு முதலியவற்றையும், கடினமான வஸ்துக்களையும்) ஸ்பரிசித்தும், दृष्ट्वा च - (நல்ல ரூபத்தையோ குரூபத்தையே), பார்த்தும், भुक्त्वा च - (இனிய உணவையோ, சுவையற்ற உணவையோ) சாப்பிட்டும், घ्रात्वा च - (நல்ல வாஸனையையோ தீய வாஸனையையோ) முகர்ந்தும், न हृष्यति - ஸந்தோஷமடையவில்லையோ, न ग्लायति वा - துக்கத்தையடையவில்லையோ, सः - அந்த மனிதன், जितेन्द्रियः - இந்திரியங்களை ஜயித்தவனாக, विज्ञेयः - அறியப்படவேண்டியவன்.

अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि तस्य वर्धन्ते आयुर्विद्या यशो बलम् ॥ १० ॥

नित्यं - எப்பொழுதும், अभिवादन शीलस्य - (எழுந்து) நமஸ்கரிக்கும் ஸ்வபாவமுள்ள, वृद्धोपसेविनः - பெரியோர்களை ஸேவிப்பவனான, तस्य - அப்புருஷனுக்கு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

आयुः - வயது, विद्या - கல்வி, यशः - புகழ், बलं - பலம் (ஆகிய), चत्वारि - நான்கும், वर्धन्ते - விருத்தியடைகின்றன.

न तेन वृद्धो भवति येनास्य पलितं शिरः ।
यो वै युवाप्यधीयानस्तं देवाः स्थविरं विदुः ॥ ११ ॥

येन - எதனால், अस्य - இந்த புருஷனுடைய, शिरः - தலை, पलितं - வெளுத்திருக்கின்றதோ, तेन - அதனால், वृद्धः - பெரியவனாக, न भवति - ஆகமாட்டான், युवा अपि - யௌவனமுள்ளவனாகிலும், यः - எவன், अधीयानः - வேத சாஸ்திரங்களை அப்யஸித்திருக்கின்ருனோ, तं - அப்புருஷனை, देवाः - தேவர்கள், स्थविरं - வயது முதிர்ந்தவனாக, विदुः - அறிகின்றார்கள்.

यथा काष्ठमयो हस्ती यथा चर्ममयो मृगः ।
यश्च विप्रोऽनधीयानः त्रयस्ते नाम बिभ्रति ॥ १२ ॥

काष्ठमयो हस्ती - கட்டையால் செய்யப்பட்ட யானை, यथा - எப்படியோ, चर्ममयः - தோலினால் செய்யப்பட்ட, मृगः यथा - மான் எப்படியோ, (तथा - அவ்வாறு), अनधीयानः - வேத சாஸ்திரங்களை கற்காத, यश्च विप्रः - யாதொரு பிராம்மணன் இருக்கிருனோ (அவன்) ते त्रयः - அப்பேர்ப்பட்ட மூவரும், नाम - (யானை, மான், பிராம்மணன் என்ற) பெயரை மட்டும், बिभ्रति -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வஹிக்கிருர்கள் (உண்மையான யானை முதலிய வற்ருலேற்படும் பலன் கிடைப்பதில்லை.)

नारुंतुदः स्यात् आर्तोऽपि न परद्रोहकर्मधीः ।
ययास्योद्विजते वाचा नालोक्यां तानुदीरयेत् ॥ १३ ॥

आर्तः अपि - கஷ்டங்களால் பீடிக்கப்பட்டவனுகிலும், अरुन्तुदः - (பிறர்) மனதிற்கு துக்கம் கொடுப்பவனுக, न स्यात् - இருக்கக்கூடாது, परद्रोहकर्मधीः - பிறருக்கு த்ரோஹம் செய்யும் கார்யத்தையும் புத்தியையும் உள்ளவனுக, न स्यात् - இருக்கக் கூடாது, अस्य - இந்த புருஷனுடைய, यया वाचा - எந்த வாக்கியத்தால், (परः - பிறன்), उद्विजते - நடுங்குகின்ருனே, अलोक्यां - நற்கதியடைய இடையூருன, तां - அப்பேர்ப்பட்ட வாக்யத்தை, न उदीरयेत् - சொல்லக் கூடாது.

चोदितो गुरुणा नित्यं अप्रचोदित एव वा ।
कुर्यादध्ययने यत्नं आचार्यस्य हितेषु च ॥ १४ ॥

गुरुणा - ஆசாரியரால், चोदितः - தூண்டப்பட்டவனுகவோ, वा - அல்லது, अप्रचोदित एव - தூண்டப்படாதவனுகவோ, नित्यं - எப்பொழுதும், अध्ययने - வேதம் முதலிய வித்தையைக் கற்பதிலும், आचार्यस्य - குருவினுடைய, हितेषु च - நன்மைகளிலும், यत्नं - முயற்சியை, कुर्यात् - செய்யவேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

शरीरं चैव वाचं च बुद्धीन्द्रियमनांसि च ।
नियम्य प्राञ्जलिस्तिष्ठेत् वीक्षमाणो गुरोर्मुखम् ॥ १५ ॥

शरीरं च एव - உடலையும், वाचं च - வாக்கையும், बुद्धीन्द्रियमनांसि च - புத்தி, கண் முதலிய இந்திரியங்கள், மனது ஆகியவற்றையும், नियम्य - அடக்கி, प्राञ्जलिः-கை கூப்பியவனாக, गुरोः - ஆசாரியருடைய, मुखं-முகத்தை, वीक्षमाणः - பார்க்கின்றவனாக, तिष्ठेत् - இருக்கவேண்டும்.

आचार्यश्च पिता चैव माता भ्राता च पूर्वजः ।
नार्तेनाप्यवमन्तव्याः ब्राह्मणेन विशेषतः ॥ १६ ॥

आचार्यः च - குருவும், पिता च एव - தந்தையும், माता- தாயும், पूर्वजः भ्राता -மூத்த ஸஹோதரனும், आर्तेन अपि- கஷ்டப்படுகின்றவனாகிலும் புருஷனால், न अवमन्तव्याः - அவமதிக்கப்படத் தக்கவர்களல்ல. विशेषतः - விசேஷமாக, ब्राह्मणेन-பிராம்மணனால், (नावमन्तव्याः - அவமதிக்கத் தக்கவர்களல்ல.)

इमं लोकं मातृभक्त्या पितृभक्त्या तु मध्यमम् ।
गुरुशुश्रूषया त्वेवं ब्रह्मलोकं समश्नुते ॥ १७ ॥

मातृभक्त्या - தாய் பக்தியால், इमं लोकं - இந்த பூலோகத்தையும், पितृभक्त्या तु - தந்தை பக்தியாலோ, मध्यमं - அந்தரிக்ஷ லோகத்தையும், एवं - இவ்வாறு, गुरुशुश्रूषया तु - குருவிற்கு செய்யும் பணிவிடையாலோ,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ब्रह्मलोकं - ப்ரஹ்ம லோகத்தையும், (அதாவது அந்தந்த லோகத்திலுள்ள சுகத்தையும்), समश्नुते - அனுபவிக்கிறான்.

यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवताः ।
यत्रैतास्तु न पूज्यन्ते सर्वास्तत्राफलाः क्रियाः ॥ १८ ॥

यत्र - எந்த வம்சத்தில், नार्यः - ஸ்திரீகள், पूज्यन्ते - கௌரவிக்கப்படுகின்றார்களோ, तत्र - அந்த வம்சத்தில், देवताः - தேவர்கள், प्रसीदन्ति - அனுக்ரஹம் செய்கிறார்கள். यत्र तु - ஆனால் எந்தக் குலத்தில், एताः - இவர்கள், न पूज्यन्ते - பூஜிக்கப்படவில்லையோ, तत्र - அந்தக் குலத்தில் (செய்யப்படும்), सर्वाः - எல்லா, क्रियाः - கர்மாக்களும், अफलाः - பிரயோஜனமற்றவைகள்.

संप्राप्ताय त्वतिथये प्रदद्यादासनोदके ।
अन्नं चैव यथाशक्ति सत्कृत्य विधिपूर्वकम् ॥ १९ ॥

संप्राप्ताय - (தம் வீட்டிற்குத்தானகவே) வந்த, अतिथये - அதிதிக்கு, आसनोदके - ஆசமனம், கால் சுத்தி செய்தல் முதலியவற்றிற்குரிய ஜலத்தையும், अन्नं च एव - அன்னத்தையும், सत्कृत्य - பூஜித்து, विधिपूर्वकं - சாஸ்திர முறைப்படி, यथाशक्ति - தன் சக்திக்குத்தக்கபடி, प्रदद्यात् - கொடுக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

वयसः कर्मणोऽर्थस्य श्रुतस्याभिजनस्य च ।
वेषवाग्बुद्धिसारूप्यं आचरन्विचरेदिह ॥ २० ॥

वयस: - தன் வயதிற்கும், कर्मण: - (தன் வர்ணம், ஆச்ரமம் இவைகட்குரிய) கர்மாவிற்கும், अर्थस्य - செல்வத்திற்கும், श्रुतस्य - (தன்) சாஸ்திராப்யாஸத் திற்கும், अभिजनस्य च - குலத்திற்கும், वेषवाग्बुद्धिसारूप्यं - வேஷம், பேச்சு, புத்தி ஆகியவற்றைத் தகுந்ததா யிருக்கும்படி, आचरन् - செய்து கொண்டு, इह - இவ்வுலகில், विचरेत् - நடந்துகொள்ளவேண்டும்.

बुद्धिवृद्धिकराण्याशु धान्यानि च हितानि च ।
नित्यं शास्त्राण्यवेक्षेत निगमांश्चैव वैदिकान् ॥ २१ ॥

आशु - சீக்கிரத்தில், बुद्धिवृद्धिकराणि - (சாஸ்திர விரோத மற்ற) புத்தியை விருத்தி செய்ய கூடியவை களும் (வ்யாகரணம், மீமாம்ஸை முதலியவைகள்), धान्यानि च - தனத்தை விருத்தி செய்யக்கூடியவைகளும் (சுக்ர நீதி முதலிய அர்த்த சாஸ்திரங்கள்), हितानि - நன்மை செய்யக்கூடிய வைத்ய சாஸ்திரம் முதலி யவைகளுமான, शास्त्राणि - சாஸ்திரங்களையும், वैदिकान् - வேதார்த்தத்தை போதிக்கக்கூடிய, निगमान् च एव - நிகமம் என்ற கிரந்தங்களையும், नित्यं - எப்பொழுதும், अवेक्षेत - ஆராய்ந்தறிய வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ऋषियज्ञं देवयज्ञं भूतयज्ञं च सर्वदा ।
नृयज्ञं पितृयज्ञं च यथाशक्ति न हापयेत् ॥ २२ ॥

ऋषियज्ञं - வேதாத்யயனம் செய்தலாகிய முனிவர்களுக்குச் செய்யக்கூடிய யாகம், देवयज्ञं - தேவர்களைக் குறித்த ஔபாஸனம், அக்னி ஹோத்ரம் முதலிய யாகம், भूतयज्ञं - பூதங்களுக்கு பலியிடுதல், नृयज्ञं - அதிதி பூஜை முதலிய மனிதர்களுக்குக் குறித்த யாகம், पितृयज्ञं च - பித்ருக்களுக்குரிய சிராத்தம் முதலிய யாகத்தையும், सर्वदा - எப்பொழுதும், यथाशक्ति - தன் சக்திக்கேற்றவாறு (செய்யவேண்டும்) न हापयेत् - விட்டு விடக்கூடாது.

न लङ्घयेद्वत्सतन्त्रीं न प्रधावेच्च वर्षति ।
न चोदके निरीक्षेत स्वं रूपमिति धारणा ॥ २३ ॥

वत्सतन्त्रीं - கன்றின் கயிற்றை, न लङ्घयेत् - தாண்டக்கூடாது. वर्षति च - மழை பெய்யும்பொழுது, न प्रधावेत् - ஓடக்கூடாது. उदके - ஜலத்தில், स्वं रूपं च - தன் ப்ரதிபிம்பத்தையும், न निरीक्षेत - பார்க்கக்கூடாது, इति - என்றும், धारणा - சாஸ்திரக் கொள்கை.

नान्नमद्यादेकवासाः न नग्नः स्नानमाचरेत् ।
न मूत्रं पथि कुर्वीत न भस्मनि च गोव्रजे ॥ २४ ॥

एकवासाः - ஒரு வஸ்திரமணிந்தவனாக, अन्नं - (அன்னத்தை) ஆகாரத்தை, न अद्यात् - சாப்பிடக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூடாது नग्नः - இடுப்பில் வஸ்திரமில்லாதவனாக, स्नानं न आचरेत् - ஸ்நாநம் செய்யக்கூடாது, पथि - வழியில், मूत्रं - சிறுநீர் முதலியவற்றை, न कुर्वीत - கழிக்கக் கூடாது; भस्मनि च - சாம்பலிலும், गोव्रजे - பசு கட்டுமிடத்திலும், न - கழிக்கக்கூடாது.

